**Vol. 6, Issue – 2** **Pg. No. 63 - 75**

புதிய அவையம்

மின்னிதழ்

ISSN : 2456-821X

SACRED HEART RESEARCH PUBLICATIONS

# கிறித்தவ சிற்றிலக்கியங்கள் போற்றும் இயற்கை சூழலியல்

*த. ஜெயசீலி*

*தமிழ் முதுகலை & ஆய்வுத்துறை*
*தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி)*

*முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதி நேரம்)*

*திருப்பத்தூர் – 635 601. திருப்பத்தூர் மாவட்டம்.*

*jeyaseelifma@gmail.com*

================================================================

***முன்னுரை:***

*குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐந்திணைகளுக்கும் தனித்தனியே பயிரினங்களும் ஏனைய உயிரினங்களும் பிறவும் உண்டு. ஒவ்வொரு நிலப்பகுதியிலும் எழில் மிகு இயற்கை காட்சிகளோடு மானிட வாழ்வையும் இணைக்கக்கூடியதாக நம் முன்னோர்கள் தெரிந்து கொண்டனர். இயற்கை மனித வாழ்வினையும், வளர்ச்சியையும் கட்டுப்படுத்தக்கூடியது என்பதைப் பற்றி இப்பொழுது உருவாகி உள்ள அறிவியல் துறை anthropogeography –ஆந்த்ராபாஞ்யாக்ரபி கூறுகிறது. மனித இதயத்தின் உணர்வுகளையும், இயற்கையின் கவர்ச்சி நிறைந்த எழிலையும் நெருங்கிப்பிணைக்கக் கூடியவராய் இருந்தனர் என்பதை பற்றியும், இயற்கையை பேணிக்காப்பது பற்றியும் கிறித்தவ சிற்றிலக்கியங்கள் கூறுவதை கிறித்தவ*

சிற்றிலக்கியங்கள் போற்றும் இயற்கை சூழலியல் என்னும் தலைப்பில் பின்வரும் உட்தலைப்புகளில் ஆராய்கின்றது இவ்வாய்வுக் கட்டுரை.

முன்னுரை

1. உலகைப்படைத்தவன் இறைவன்.
2. படைப்பின் வரலாறு.
3. இயற்கையின் ஓர் அங்கம் - மனிதன்.
4. இயற்கையோடு இணைந்த வாழ்வு.
5. இயற்கையில் உறைந்திடும் இறைவன்,.
6. சோலைகள்,மலர்கள், கனிகள் - வகைகள்
7. இயற்கையை பேணிக்காத்தல்

முடிவுரை

**உலகைப்படைத்தவன் இறைவன்:**

அழகியஇவ்வுலகைஒப்பற்றஇறைவனேபடைத்தார்என்னும் உண்மையை ஞான நொண்டி நாடகம் எடுத்துரைக்கின்றது.இதனையே,

"ஒப்பில்லாத ஒரே பராபர

வஸ்து உண்மையில் உண்மையான மொழி

தப்பிலாத சுயம் பிரகாச்

சமஸ்த நன்மைச்சொரூபியான் ".

(ஞான நொண்டி நாடகம் பா. 8)

என ஆசிரியர் தஞ்சை வேதநாயக சாஸ்திரியார் பாடுவதன் மூலம் இயற்கை, உலகம், அண்ட சராசரம், திசைகள், கோள்கள், உயிரினங்கள் என அனைத்தையும் ஒரே வார்த்தையால் படைத்தார் என பாடுகிறார். இறைவனின் படைப்பாற்றலை திருக்குமார சதகம் என்னும் கிறித்த சிற்றிலக்கியம் குறிப்பிடுவதையே,

"ஆதியும் அந்தமும் ஆம்பரம் பொருளும் நீ

அனைத்துலகும் படைத்தவனு நீயே

ஓதிய அண்ட சராசரம் அனைத்தையும்

ஒக்கவே அரசோச்சி வருபவன் நீ ".

*(கிறித்தவ சமயச்சிற்றிலக்கியங்கள் பா. 28)*

என்னும் பாடல் வரிகள் உணர்த்துகின்றன. ஆதி அந்தம் இல்லா பரம்பொருளாகிய இறைவனே இயற்கையே ஆளுபவராக இருக்கிறார் என்பது புலனாகிறது.உலகத்தையும், உயிரினங்களையும் படைத்த இறைவன் அதனைகாக்கவும், அழிக்கவும் வல்லமை படைத்தவன் என்பதையே,

"பார்முதலாய்த்தான் படைத்த பல்லுலகம் அத்தனையும்

வேர் முதலாய்ப்பேர்த்தசைக்கும் வீரத்தனிக்கோலான்".

*(கித்தேரியம்மாள் அம்மானைபா.19 )*

என ஆசிரியர் வீரமாமுனிவர் இறைவனின் படைப்பின் மாட்சியினை எடுத்துரைக்கின்றார்.ஞான நொண்டி நாடகமானதுபூமியும், கோள்களும் அந்தரத்திலே படைக்கப்பட்டுள்ளது என்பதே பின்வருமாறு குறிப்பிடுகிறது. "

" "பூமியந்திரிசொற்றகமுஞ்சதுர்ப்

பூதியங்களுமாக்கியே ஒரே

ஓம் அனாதி பரப்பிரமம்

உலகங்கள் யாவும் உண்டாக்கினார்

*(ஞானநொண்டி பா 11)*

இந்த பூமியும், கோள்களும் அந்தரத்திலே சுழல்கிறது என்கிறது விஞ்ஞானம், இதனையே மெய்ஞானம் முன்பே குறிப்பிட்டுள்ளது சிறப்பு.

**படைப்பின் வரலாறு**:

இறைவன்உலகை வெறுமையான நிலையிலிருந்து படைத்தார். ஆறு நாட்களாக படைப்பின் நிகழ்வினை மிக அழகாக கிறித்தவ சிற்றிலக்கியங்கள் விவரிக்கின்றன. இதனையே ஞானநொண்டி என்னும் சிற்றிலக்கியம் பாடுகிறது

(i) **முதல் நாள் ஒளி படைக்கப்படுகிறது**:

வெறுமையான நிலையில் தனது ஒரே வார்த்தையால் ஒளியினை உண்டாக்கினார். இதனையே,

"விந்தையாய் முதனாளதில்
வெளிச்சத்தையே விதித்து எல்லையும் மடர்
அந்த காரமும் வேறதாய்ப்பிரித்து
அல்லுடன் பகலாக்கினார்".

*(ஞானநொண்டி பா. 12)*

*என ஒளியினை உருவாக்கி அதனை இருளிலிருந்து பிரித்தார். ஒலிக்கு பகல் எனவும், இருளுக்கு இரவுனவும் பெயரிட்டு, பகலும் இரவும் சேர்ந்து ஒரு நாள் என கணக்கிட்டார். இன்றளவும் இந்த இயற்கை அமைப்பு தொடர்ந்து கொண்டிருப்பதன் மூலம் இறைவனை இரவு பகலை உருவாக்கினார் என்பது சிறப்பு.*

*(ii).* ***இரண்டாம் நாளில் அண்டங்களைப் படைத்தல்:***

*அண்டங்களைப்படைத்து, ஆகாயம் - பூமி என இரண்டாகப்பிரித்தார் என்பதையே*

*“அப்புவி நடுவாய் இரண்டாந்தினத்து*
*அண்ட கோளம் உண்டாக்கியே சல*
*மெய்ப்பதால் பிரித்து அங்கதற்கு*
*வியோமமென்றுவிளம்பினார்”*

*(ஞானநொண்டி நாடகம் பா.13)*

*எனப்பாடுவதன் மூலம் ஆகாயம், பூமி இரண்டும் பிரிக்கப்பட்டு வானத்தை நீருக்கு மேலாக இருக்குமாறு அமைக்கப்பட்டுள்ளது தெளிவு.*

*(iii)* ***மூன்றாம் நாளில் - பூமியில் உயிரினங்களை படைத்தல்:***

*“அம்பரத்தை மூன்றாந்தினத்தில்*
*வேறாக்கி அம்பு வியானதிற்கன*
*சம்பிரமத்துடன் பூண்டு புற்கள்*
*தருக்களை முளைப்பித்தனர்”*

*(ஞானநொண்டி பா.14)*

*என்ற பாடலில் ஆசிரியர் தஞ்சை வேதநாயக சாஸ்திரி அவர்கள் பூமியில் பூண்டு,புற்கள், மரங்கள்,செடி, கொடிகள் ஆகியவற்றை கடவுள் முளைக்கச் செய்தார் எனக்குறிப்பிடுகிறது. அறிவியல் அறிஞர்களின் கூற்றுப்படி பூமியில் மட்டுமே உயிரினங்கள் வாழக்கூடிய தட்பவெப்ப நிலையும், சூழ்நிலையும் நிலவுகிறது என்பதன் மூலம் உயிரினங்களை பூமியிலே படைத்தார் என்பது நிரூபிக்கப்படுகிறது.*

*iv).* ***நான்காம் நாளில்வான மண்டலத்தை படைத்தல்:***

*“நான்கு நாளதிற்சந்திர சூரியன்*
*ராவுடன்பகலானவேஒளி*
*யோங்கு மீன்கள் அனந்தமும்*
*ஒருமிக்கவானிலுண்டாக்கினார்”*

*(ஞானநொண்டி – பா. 15).*

*என இரவையும் பகலையும் ஆட்சி செய்ய நிலவையும் சூரியனையும், ஒளி வீசும் விண்மீன்களையும் வானத்தில் படைத்தார் என்பது புலனாகிறது.*

*(v)* **ஐந்தாம் நாளில் நீர்வாழ் உயிரினங்களைப் படைத்தல்**:

*"திரளாக மட்சங்களைச்செனிப்*
*பித்து நீரினிற்பட்சிசாதிகள்*
*ஆமதாக ஐந்தாந்தினத்தில்*
*உண்டாக்கினாரொரு வாக்கினால்"*
*(ஞானநொண்டி – பா. 16).*

*என்று நீர்வாழ் உயிரினங்கள் பறவையினங்கள், விலங்குகள், நீந்துவன என அனைத்தையும் ஒரே வாக்கினால் உண்டாக்கினார் எனப்பாடுகிறது ஞானநொண்டிநாடகம்.*

*(vi)* **ஆறாம் நாளில்மனிதனைப்படைத்தல்:**

*இறைவன் மனிதனை மண்ணிலிருந்து உருவாக்கினார் என்பதையே,*
*"ஆறு நாளைக்குள்ளாக்கியே கடை*
*யாந்தரத்தருள் கூர்ந்துமே என்றும்*
*மாறிலாதவன் ஏதனில் நில*
*மண்ணினாலெனைப்பண்ணினான்".*
*(ஞானநொண்டி நாடகம் பா.20)*

*எனக்கூறுவதன் மூலம் ஆறுநாட்களாக எல்லாவற்றையும் ஒரே வார்த்தையால் உருவாக்கியவர் மனிதனை மட்டும் ஏதோன் நிலத்தில் மண்ணின்று உருவாக்கினார் என அறியமுடிகிறது. மனிதன் இயற்கையின்று எடுக்கப்பட்டான் என்பது தெளிவு.*

**மனிதன் இயற்கையின் ஓர் அங்கம்**:

*மண்ணினின்றுபடைக்கப்பட்ட மனிதனாக இருந்தாலும் இறைவன் தனது ஆவியினை நாசியில் செலுத்தி அவரது சாயலாகப்படைத்தார் என்பதை கிறித்தவ சிற்றிலக்கியங்கள் உறுதிப்படுத்துகின்றன.இதனையே,*
*"நாசியின் வழியாகவே பரம*
*நாயகன் தமதாவியை யுற*
*வீசி நானுயிர்ப்பெய்த ஊதியும்*
*விட்டனர் விழித்திட்ட நான்"*
*(ஞானநொண்டி நாடகம் பா. 21)*

*என ஞானநொண்டி நாடகப்பாடல் வரிகள் மனிதன் பஞ்சபூதங்களின் கலவை என்றும், இறைவனின் ஆவி குடிகொண்டிருக்கும் இறைசாயல் என்றும் இயற்கையோடு வாழ்ந்தால் தான் மனித வாழ்வு முழுமையானதாகவும் இருக்கும் என்றும் ஆரோக்கியமும், மாண்புமிக்கதுமாக இருக்கும் என்றும் உணர்த்துகின்றது.*

**இயற்கையோடு இணைந்த வாழ்வு**:

உலகவாழ்வில் மனித வாழ்வு ஒரு கூறு என்றால், அவனுக்கு புறத்தே உள்ளவற்றைப் பிறிதொருகூறு என்பர். இறைவனுக்கும் அண்டங்களுக்கும் இடையேயுள்ள பிணைப்பினைப் புலப்படுத்திஉறவாடச் செய்வது இயற்கை என்றும் மக்கள் இயற்கையை தனியோரு பொருளாகக் கருதவில்லை. வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் பெரியோர்களையும்,சிறந்த ஆளுமையை சிறப்பிக்க, வாழ்த்துவதற்கும், உவமையாகப் பயன்படுத்துவதற்கும் கீழ்வரும் முறையில் இயற்கைப்பொருளைப் பயன்படுத்தினார்கள் என கிறித்தவ சிற்றிலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன.

(i) இயற்கைப்பொருள் கொண்டு வாழ்த்துதல்.
(ii) இயற்கை வண்ணங்களை சிறப்பித்தல்.
(iii) உடல் தோற்றத்தை இயற்கையுடன் ஒப்பிடுதல்.

(i) இயற்கைப்பொருள் கொண்டு வாழ்த்துதல்.

சமூகத்தில் சான்றோர்களையும், பெரியோர்களையும் பெருமைப்படுத்துவதற்கும், வாழ்த்துவதற்கும் மக்கள் இயற்கைப்பொருள்களை அதிகம் பயன்படுத்தினர் என்பதை கிறித்தவ சிற்றிலக்கியங்கள் குறிப்பிடுகின்றன.இதனையே,

"தேச மேவும் உலாச மாந்தர்கள்
தேசு மாதர்கள் பாசமாய்
வாச மேவு விலாச மரக்கிளை
மாசிலாதெடுத்து ஆசையாய்
ஓசன்னா பவ நாசன் நாவென
ஓசையாய்க்கிறிஸ்தேகவே
நீச வாகன ராசனே எங்கள்
நேசனே யெனப்பேசவே"
(பெத்லகேம் குறவஞ்சி பா.72)

என பெத்லகேம் குறவஞ்சி என்னும் சிற்றிலக்கியம் பாடுவதன் மூலம் எருசலேம் மக்கள், ஆண்கள், பெண்கள், பெரியோர்கள், குழந்தைகள் என அனைவரும் தங்கள் கைகளில் குருத்தோலைகளை பிடித்துக்கொண்டு இயேசு பெருமானை,எருசலேம் நகர் வீதிகளில் வரவேற்றார்கள். தங்களின் மேல் போர்த்தியிருந்த விலையுர்ந்த ஆடைகளையும் தரையில் விரித்தனர். இயேசு சிறந்த போதகராக அனைவராலும் மதிக்கப்பட்டவர். அரசராக மக்கள் அவரைப்பார்க்கலாயினர். அவர் நினைத்திருந்தால் குதிரை அல்லது

*யானையிலோ அமர்ந்து பெருமையாக உலா வந்திருக்கலாம். ஆனால் எளிய கோவேறு கழுதைக்குட்டியின் மேல் அமர்ந்து உலா வந்தார். முக்கியத்துவம் பெறாத விலங்காக கோவேறு கழுதை இருந்தாலும், அதனையும் இயேசு பெருமான் மதித்தார். உயிரினங்களை மதிக்கும் பண்பு அவரிடம் சிறந்து விளங்குவதைக்காணலாம்.*

*ii) இயற்கை வண்ணங்களை சிறப்பித்தல்.*

*சிறந்த மனிதர்களின் ஆளுமையை விவரிக்க, இயற்கையில் கொட்டிக்கிடக்கும் நிறங்களை புலவர்கள் பெரிதும் பயன்படுத்தினர் என கிறித்தவ சிற்றிலக்கியங்கள் கூறுகின்றன. இதனையே,*

*''வன்ன நிலையங்கி பொன்னின் கச்சைகள்*

*மன்னும் உடையென மின்னவே,*

*சொன்ன முடிவெண்மை யென்ன இருவிழி*

*துன்னுகனற்கொழுந்தன் ன தாயத்*

*தன்மையின் சொகுசுன்னு மடிகடல்*

*தன்னின் அதிர்மொழி பன்னவே,,*

*முன்னும் ஆனவர் பின்னும் ஆனவர்*

*முன்னதாக வந்து என்னை ஆள்பவர்''*

*(பெத்லகேம் குறவஞ்சிபா.74)*

*என இயேசு பெருமான் அணிந்திருந்த நீண்ட அங்கி பல வண்ணங்களை தன்னகத்தே கொண்டதாகவும், இடைக்கச்சை பொன் நிறத்தாலும் மற்றும் பொன்முடி, வெண்ணிற தொங்கலாடை,தீக்கொழுந்து போன்று ஒளிவீசும் இருகண்களைக் கொண்டு, கடல் அலைமடிந்து வருவது போல் அனைவருக்கும் விடுதலை தரும் மொழியினை முழங்கியவாறு இயேசு பெருமான் உலா வருகின்றார் என இயேசுவின் தோற்றத்தையும்,அணிகலன்களையும், ஆடைகளையும் இயற்கை நிறங்களால் மேன்மைப்படுத்தி பெத்லகேம் குறவஞ்சி பாடுவது சுவைக்கத்தக்கது.*

*iii) உடல் தோற்றத்தை இயற்கையுடன் ஒப்பிடுதல்*

*நல்லவர்களின் குணங்களை போற்றுவது போலவே அவர்களின் உடல் தோற்றத்தையும் இயற்கைப்பொருளுக்கு உவமையாக்கி மகிழ்கின்றன கிறித்தவ சிற்றிலக்கியங்கள் இதனை பின்வரும்பாடல் குறிப்பிடுகின்றது*

*''அங்கம் உடன்ஒளிர்பொங்கும் எழுகண*

*மங்கை அதனில் இலங்கவே*

*கங்குல்அகல விளங்கு கதிரன்மு*

*கங்கொள் பார்வைதுலங்கவே,,*

*தங்கு கூர்மை நெருங்கவாள்பிர*

*சங்கமாய் நிறைந்தெங்குமானவர்*

*பொங்கு தீயர்கலங்கவே''*

*(பெத்லகேம் குறவஞ்சி பா. 75)*

*என இயேசு பெருமானின் உடலில் ஏற்படும் ஒளியானது விண்மீன் கூட்டங்களின் ஒளியாகவும், இருளே அகற்றுகின்ற சூரியனாக அவரது முகமும் ஒளிர, கூர்மையான வாள் போன்று, நிலையான அருளுரை வார்த்தைகளே ஒலிக்கவும், தூய்மையான வாழ்வை மேற்கொள்ளும் இயேசு பெருமானின் ஒளி பிரகாசிக்க உலா வருவதாகவும், தீயவர்கள் இருளைப்போன்று கலக்கம் அடைந்து மறைந்து போனதாகவும் ஆசிரியர் தஞ்சை தே.வேதநாயக சாஸ்திரியார் குறிப்பிடுவது சரியே!*

***இயற்கையில்உறைந்திடும்இறைவன்:***

*இயற்கையோடு இணைந்த வாழ்வினை மேற்கொண்ட மக்கள் இறைவனையில் இயற்கை சூழலிலே கண்டு, அவன் குடிகொள்ள திருத்தலங்களை அமைத்தனர் என்பதே கிறித்தவசிற்றிலக்கியங்கள் எடுத்தியம்புகின்றன. இதனையே திருக்காவலூர் கலம்பகத்தில்,*

*''விண்ணுலகம் புகழ்ந்தேத்தி வியந்தலர் சேவடிவருட*

*மண்ணுலகத்துயர் நீங்க மன்னுயிர்கள் சிறந்துவப்ப*

*வான்றளங்கள்புறங்காப்ப வானரசர்பணிகேட்ப*

*மீன்றளங்களணி மதிபோல் விண்ணரசாளாயினையே''*

*(திருக்காவலூர் கலம்பகம் பா 2)*

*எனப்பாடுவதன் மூலம் அன்னை மரியாள் நிலவைப் போலவும், அவள் இடும் கட்டளையை ஏற்று பணி செய்யக்காத்திருக்கும் தூதர் படையினர் விண்மீன் கூட்டங்கள் போலவும், துன்பம் நீங்கப் பெறுமாறு விண்ணுலக ஆட்சியினை*

உடையவளாக இறைவனின் தாயை ஒப்புமைப்படுத்திப் பாடுகிறார் ஆசிரியர் வீரமாமுனிவர்.

அடைக்கல அன்னை சோழ நாட்டின் காவேரி ஆற்றின் கிளையாகிய கொள்ளிடத்தின்வடக்குக் கரையில் எழில் மிகு சோலையில் வீற்றிருப்பதையே,

“கனைபூத்த சோணாட்டுக்காவிரியின் வடகரை மேற்

சினை பூத்த நிழற்பொழில் வாய்ச்சிங்க நெடுங்கொடிநிழற்றுந்

திருக்காவலூரகத்திகழொளியாய் மணிக்கொயி

லருட்காவலியற்றிநமையளிப்பது நின்றமையாமோ”.

(திருக்காவலூர் கலம்பகம் பா. 14)

என அரசிக்கு உரிய சின்னமாகிய சிங்கக்கொடி நிழல் தரும் திருக்காவலூரில் பேரொளி விளங்கும் ஆலயத்தில் தங்கி அன்புடன் அனைவரையும் பாதுகாப்பதாகக்கூறுவதன் மூலம் இயற்கை எழில் மிகு சோலையில் திருத்தலம் அமைந்திருப்பது சிறப்பு ஆகும்.

மேலும் கோள்களும், திசைகளும் இறைவனின் தாயான அடைக்கல அன்னைக்குஅடிபணிவதையே,

“உள்ளுருவாக் கவசமென உத்தரிகத்துடன் மருடீர்

தெள்ளுருவா மணிமாலை சிறந்தேந்துங்கை நீட்டி

வாய்ப்பொய்யா மறைத்திசையாம் வடதிசையே தனிநோக்கித்

தாய்பொய்யாவடைக்கலமே தருவது நின் புகழாமோ”.

(திருக்காவலூர் கலம்பகம் பா 14)

என்ற வரிகள் உடலுக்குள் ஊடுருவிச்செல்ல முடியாது தடுக்கும் கவசத்துடன் அறியாமை இருளை நீக்குகின்ற செபமாலையை கையில் ஏந்தியவனாய் காட்சியளிக்கின்றாள் எனவும் மண்ணுலகமும் விண்ணுலகமும் ஒன்றாக தோன்றும்படி ஆலயத்தினுள் அன்னை மரியாள் அருள்பாலிக்கின்றாள் என அடைக்கல அன்னையின் திருத்தல எழிலினைபோற்றுகின்றது திருக்காவலூர் கலம்பகம்.

சோலைகள், மலர்கள், கனிகள் - வகைகள்

கிறித்தவ சிற்றிலக்கியங்கள் மனதைக்கவரும் சோலைகளின் அழகை வருணித்தும், அச்சோலைகளில் பூத்திருக்கும் எண்ணற்ற மலர்களையும்,

அவற்றின் வகைகளையும், பெயர்களையும் குறிப்பிட்டு பாடியிருப்பது சிறப்பாகும். இதன் மூலம் அக்காலத்தில் மலர்ந்த மலர்களைப்பற்றியும், பருவகாலங்களைப் பற்றியும் அறியமுடிகிறது.

i. மலர்கள்

இயேசுபிரான் பிள்ளைத்தமிழில் ஆசிரியர் அருள். செல்லதுரை அவர்கள் இயேசுவை சப்பானிப் பருவத்தில் விளித்துப்பாடுகிறார். இயேசு அழகிய குழந்தையாக கைகளைத்தட்டி வரும்பொழுது, அவரைச்சுற்றி பூத்திருந்த மலர்களும் சோலையும் வருணனை செய்யப்படுகிறது. இதனையே,

“மொட்டரும் பானமுல்லை மல்லிகை மருக்கொழுந்து

முளரிப் பூ தாமரைப்பூ

முகையவிழ் பிச்சிப்பூ தகை மண இருள் வாழ்ச்சி

முழுச்சிவப்பு செம்பருத்தி

பொட்டன மயிழம்பூ, பொன்னன செவ்வந்தி

பூநீண்ட பன்னீர்ப் பூவும்

பொன்னிழைதட்டிலேந்திப் பொறபதம் கொட்டவேண்டிட

பொறபடாம்வேய்யானை மீது”

(இயேசுபிரான் பிள்ளைத்தமிழ் ப 45)

என பூசனைக்குரிய பூக்களில் முல்லை, மல்லிகை, மருக்கொழுந்து, முளரிப்பூ

(ரோஜாப்பூ), தாமரைப்பூ, பிச்சிப்பூ, இருவாட்சி, செம்பருத்தி, மகிழம்பூ, செவ்வந்தி, பன்னீர்ப்பூ என பதினொரு பூக்கள் இப்பாடலில் குறிப்பிடப்படுகின்றன.

ii) கனிகள்

“கங்கை பாயும் மலைத்தோட்டம்

கனிந்த அரத்திசெந்தாழை

கனத்த பயாமா பப்பாளி

களாநாவல்லெண்வகை வாழை

தொங்கும் கொடி முந்திரி கொய்யா

*தோட்டுவிளாமாதுளை சீத்தா''*

*(இயேசுபிரான் பிள்ளைத்தமிழ் பா.44).*

*என்ற இயேசு பிரான் பிள்ளைத்தமிழில் இப்பாடலானது ஆரத்தி (ஆப்பிள்), செந்தாமரை (பூங்காவை), அன்னாசி, கொடிமுந்திரி (திராட்சை), விளாம்பழம், ஆரஞ்சுப்பழம், எண்வகைப் வாழை- (செவ்வாழை, வெள்வாழை, ரசதாளி, மொந்தன், அடுக்கு வாழை, மலை வாழை, பச்சை வாழை, கருவாழை) என கனிகளின் பெயர்களும் குறிப்பிடப்பட்டுள்ளது வியத்தக்கது.*

***மரங்களின்பெயர்கள்** :*

*இயேசுபிரான் பிள்ளைத்தமிழ் என்னும் சிற்றிலக்கியம்*

*''உயர்தனிச்செம்மொழியை யரியணைய மர்த்தி மூவேந்தர்*

*ஒச்சிய செங்கோலின் ஆட்சி*

*உயரைந்து விரையுமூப்பத்திரண்டோமா விகை வகையும்*

*ஒருபத்துத்துவரும் சேர்ந்தே*

*உன் மேனி நீராட்டி உயர்பட்டுப் பொன்னுடுத்தி*

*உச்சிமிசைக் கொண்டிருப்பர்''*

*(இயேசுபிரான்பிள்ளைத்தமிழ் பா.98).*

*எனப்பாடி, இயேசு பாலனுக்கு கீழ்வரும் வாசனைத்திரவியங்களையும், நறுமணப்புகைகளையும் மேனிக்கு காட்டினர் என்பது மிகவும் வியப்புக்குரியது. துருக்கம், தகரம், அகில், சந்தனம் போன்ற நறுமணப்பொருளும், நாவல், பூவந்தி, கடு, நெல்லி, தான்றி, ஆல், அரசு, அத்தி, கருங் காலி, மாந்தளிர் என்னும் பத்துவகை துவரும்,. இலவங்கம், பச்சிலை, கச்சோலம், ஏலம், நாகணம், கோட்டம், நாகம், மதாவரிசி, தக்கோலம், நன்னாரி, வெண்கோட்டம், காசறை, வேரி, இலாமிச்சம், கண்டில்வெண்ணெய், கடு, நெல்லி, தான்றி, துத்தம், வண்ணக்கச்சோலம் போன்ற மரக்கட்டைகளை ஊறவைத்த நீரில் குழந்தை இயேசுவே நீராடினர் என்னும் செய்தினை குறிப்பிடுகின்றது.*

***இயற்கையை பேணிக்காத்தல்:***

*கடவுளின் வார்த்தையினால் படைக்கப்பட்ட உலகம் ஆறுநாட்களாக சிறப்பாக நிகழ்ந்தது. ஆறாவது நாளாக மனிதனை ஆணும் பெண்ணுமாக படைத்து, அறிவு, ஞானம், திறமைகள் என அருள் வரங்களைப்பொழிந்து,*

இயற்கையை அவர்களிடத்தில் ஒப்படைத்தார் என்பதை கிறித்தவ சிற்றிலக்கியங்கள் உறுதிப்படுத்துகின்றன. இதனையே,

“ஒரு சொல்லதனால் அளவிறந்த

உலகம் யாவும் சூனியத்தில்

உதிக்கச்செய்தேஅவ்வளவில்

உலவச்செய்யும் அருளரசே”

(கிறித்தவச்சிற்றிலக்கியங்களில் வாழ்வியல் மதிப்பீடுகள் ப.40)

என இறைமைந்தர்பிள்ளைத்தமிழ்பாடுகின்றது. பூமியில் வாழ்வதற்கு தேவையான மூலதாரங்களைப் படைத்த கடவுள் ஒளி,வானம்,நீர், நிலம், புற்பூண்டு,பகல்,இரவு, உயிரினம் எனப்படைத்து மனிதன் அதனை ஆட்சி செய்து, பேணிக்காத்திட கட்டளையிட்டார் என்பது புலனாகிறது.

ஜே.சி. ஷார்ப் பின்வருமாறு கூறுகிறார் “மனிதனுடைய ஆன்மாவைத் தன்வயப்படுத்திக் கொள்ள நினைக்கின்றது இயற்கை. அது பல வகையான மாயங்களைச்செய்து மனித இதயத்தை ஈர்க்கப்பார்க்கிறது. விரிந்து கிடக்கும் பரப்பாலும் ஓங்கி வளரும் உயரத்தாலும் இயற்கையானது மனிதனை உயர்த்த முனைகின்றது. தன் எழிலால் அவனை மகிழ்விக்க முயல்கின்றது. கொலு வீற்றிருக்கும் தன் அமைதி திறந்தால் அவனுக்கு மீட்சிஅளிக்கின்றது”.

(பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை பா. 33).

இத்தகைய நலமும், வளமும் தரும் இயற்கையை நேசிப்பது, காப்பது நமது கடமையாகும் என்பது வலியுறுத்தப்படுகிறது.

**முடிவுரை**:

கிறித்தவ சிற்றிலக்கியங்கள் காட்டும் இயற்கையான வாழ்க்கைக்கும் இன்றைய மக்களின் நிலவெளிக்கும் இடையில் பெரிய இடைவெளி உள்ளது. இயற்கைக்கும் மக்களுக்குமான உறவு பெரிதும் சிதைந்து உள்ளது. மழைக்காடுகள், சோலைகள் அளிக்கப்படுகிறது. தமிழகத்தில் இன்று செயல்படுத்தப்படுகின்ற கூடங்குளம் அணு உலைகள், மீத்தேன் திட்டம், நியூட்ரினோ, கார்பன் ஹைட்ரோ திட்டம், போன்ற பிரமாண்டமான அறிவியல் திட்டங்கள், கார்ப்பரேட்டுகளின் ஆதாயத்திற்காக அமல்படுத்தப்படுகின்றன. இன்னொரு புறம் சூழலியல் சீர்க்கேட்டினால் நீரூற்றுகள் அற்றுபோய், ஆறுகள் வறண்டு போய்விட்டன.பூச்சி, வேதியல் உரங்கள் காரணமாக நிலம்,நீர், ஆகாயம், நெருப்பு, காற்று மாசடைந்துள்ளது. இந்த அழகான உலகம் மனிதனின் கரங்களில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. கிறித்தவச்சிற்றிலக்கியங்கள் போற்றிய

இயற்கையானது இறைவனுக்கு கட்டுப்பட்டதாகவும், மனிதனின் ஆளுமைக்கு உட்பட்டதாகவும் காட்டப்படுகின்றது. எனவே இயற்கை ஆற்றலை மனிதன் தனது பேராசைக்கு பயன்படுத்தாமல், வாழ்வின் தேவைக்கே பயன்படுத்தினால், சுயநலத்தினால் பூமிதாய் அழிவதைத்தடுக்கலாம். அடுத்த தலைமுறைக்கு அழகான இயற்கைச்சூழலைத்தர முடியும்.

பார்வை நூல்கள்


1. குமரிச்செழியன், 2018, ஞான நொண்டி நாடகம், சாரதா பதிப்பகம், ஜி -4, சாந்தி அடுக்ககம், 3, ஸ்ரீ கிருஷ்ணாபுரம், ராயப்பேட்டை, சென்னை – 14.
2. சுந்தரராசன். சே, 2009, திருக்காவலூர் கலம்பகம், முல்லை நிலையம், பாரி நிலையம், 90, பிராட்வே, சென்னை – 600 108.
3. சுந்தரராசன். சே, 2015, கித்தேரியம்மாள் அம்மானை, முல்லை நிலையம், 9. பாரதி நகர், முதல் தெரு, தியாகராய நகர், சென்னை – 600 017.
4. சுந்தரராசன். சே, 2009, பெத்லகேம் குறவஞ்சி, முல்லை நிலையம், பாரி நிலையம், 90, பிராட்வே, சென்னை – 600 108.
5. ஞான சந்திர ஜாண்சன். யோ, 2009, கிறித்தவத் தமிழ் இலக்கிய வளம், முல்லை நிலையம், 9. பாரதி நகர், முதல் தெரு, தியாகராய நகர், சென்னை – 600 017.
6. இன்னாசி. சூ. கிறித்தவத் தமிழ்க்கொடை, தொகுதி – II, மெய்யப்பன் தமிழாய்வகம், 53, புதுத்தெரு, சிதம்பரம் – 608 001.
7. செல்லத்துரை. அருள் பாவலர், இயேசுபிரான் பிள்ளைத் தமிழ், இரண்டாம் பதிப்பு, எண். 255, எசு1, மூன்றாம் முதன்மைச் சாலை, வெங்கடராமன் நகர், அசுதினாபுரம், சென்னை – 600 064.
8. மணிவளன் சே. ச. சி. முனைவர், கிறித்தவச் சிற்றிலக்கியங்களில் வாழ்வியல் மதிப்பீடுகள், கிறித்தவ ஆய்வு மையம், தூய வளனார் தன்னாட்சிக் கல்லூரி, திருச்சி – 02.
9. சுஜாதா தேவி. அ, கிறித்தவ சமயச் சிற்றிலக்கியங்கள், ஜீவா பதிப்பகம், மனோகர் மேன்சன், 12/ 28, சௌந்தரராஜான் தெரு, சென்னை – 17.